...மைச் செயலர்/
...ளர் (வ.க.)
... ஏப் 2017
... சென்னை-600 005

சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று, தேர்தல் நடைபெறவுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி தவிர்த்து தமிழகத்தின் பிற பகுதிகளில், **"8 தோட்டாக்கள்"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை

**அரசாணை (டி) எண்.159**

**நாள்: 07.04.2017**
**துன்முகி, பங்குனி 25,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**
**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 21.07.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 03.01.2012.
3. பொதுத் (தேர்தல்) துறையிடமிருந்து பெறப்பட்ட குறிப்பு, நாள் 23.03.2017.
4. கூடுதல் தலைமைச் செயலர் / வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக் குழு–/9687/2017, நாள் 05.04.2017 தேர்வுக்குழு எண்.02/2017–2018.
5. தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கடித எண்.நிதி 3/3030/2017, நாள் 07.04.2017.

-----

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு **"8 தோட்டாக்கள்"** திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு வழங்கியுள்ளனர் என தெரிவித்துள்ளார்:-

திருமதி S.M.சரஸ்வதி, இணை ஆணையர் (செயலாக்கம்), (இடை மாநில புலனாய்வுக்குழு), சென்னை:-

*"'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம். திரைப்படத்தின் பெயர் தமிழில் உள்ளது. திரைப்படத்தின் கதை, வசனங்கள், காட்சிகள் யாவும் பிறமொழிக் கலப்பின்றி ஆபாசமின்றி தமிழ் நாகரீகத்திற்கும் பண்பாட்டிற்கும் உட்பட்டு தயாரிக்கப்பட்டிருப்பதால் அரசாணையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கேளிக்கை வரிவிலக்கிற்கு தகுதியான திரைப்படம் என பரிந்துரை செய்துள்ளார்".*

திரு ம.சி.தியாகராஜன். துணை இயக்குநர் (நிர்வாகம்), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை:-

*"படம் 'யு' சான்றிதழ் பெற்றுள்ளது. ஆபாசம், வன்முறை, பிறமொழிக் கலப்பு குறிப்பிடும்படி இல்லை. கதைக்கரு தமிழ்ப் பண்பாட்டிற்குரியதாக உள்ளது. படத்தின் தலைப்பு தமிழில் இல்லை. 'தோட்டா' என்பது உருதுச் சொல். எனவே, இப்படத்தின் தலைப்பு தமிழில் அமையாததால் வரிவிலக்கு வழங்கப் பரிந்துரைக்கப்படவில்லை".*

திரு சங்கர் கணேஷ், இசையமைப்பாளர்:-

*"U சான்றிதழ் உள்ள படம். வன்முறை இல்லை. பெண்களை இழிவு செய்யா படம். பிறமொழி இல்லாத படம். நல்ல அறிவுரை உள்ள படம். ஆனால், படத்தின் பெயர் தமிழில் இல்லை. அரசாணைக்கு, நிபந்தனைகளுக்கு, படத்தின் பெயர் தமிழில் இல்லாததால் வரிவிலக்களிக்க தகுதி இல்லை".*

திரு. A.L. ராகவன், பழம்பெரும் பின்னணிப் பாடகர்:-

*"படத்தின் தலைப்பு தமிழ் பெயர் கொண்டதாக இல்லை. 'U' சான்றிதழ் பெற்ற படம். வன்முறையில்லை. ஆபாசமில்லை. அரசாணையின்படி வரிவிலக்கு அளிக்க தகுதியில்லை".*

திருமதி. L.R. ஈஸ்வரி, பின்னணிப் பாடகி:-

*"படத்தின் தலைப்பு தமிழில் இல்லை. 'U' சான்றிதழ் பெற்றது. ஆபாசம், வன்முறை ஏதுமில்லை. அரசாணையின் நிபந்தனைக்கு உட்படாததால் வரிவிலக்கிற்கு தகுதியானது அல்ல".*

திருமதி. M.N. ராஜம், பழம்பெரும் நடிகை:-

*"படத்தின் தலைப்பு தமிழ் அல்ல. 'U' சான்று பெற்ற படம். ஆபாசம் இல்லை. வன்முறை இல்லை. வரிவிலக்கு அளிக்க தகுதி உள்ளதாக இல்லை".*

3. இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட தமது கடிதத்தில், **"8 தோட்டாக்கள்"** என்பதில், தோட்டா என்பது உருது சொல்லாகும். இதற்கு தமிழ் மொழியில் துப்பாக்கி குண்டு என்பதாகும். எனினும், தமிழ் நாடு காவல் துறையில் தோட்டா என்ற சொல் வழக்கில் இருந்து வருகிறது என தெரிவித்துள்ளார்.

4. இந்நேர்வில், **"8 தோட்டாக்கள்"** திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களில் அலுவல் சார்ந்த உறுப்பினர் திருமதி.S.M.சரஸ்வதி, இணை ஆணையர் (செயலாக்கம்), (இடை மாநில புலனாய்வுக்குழு), சென்னை அவர்கள் கேளிக்கை வரிவிலக்கிற்கு தகுதியானது என்று தெரிவித்துள்ளார். இதர ஐந்து உறுப்பினர்கள் **"8 தோட்டாக்கள்"** என்ற திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்ற படம், வன்முறை, ஆபாசம் ஏதுமில்லை என்றும், பிற மொழி கலப்பு குறிப்பிடும்படி இல்லை என்றும், கதைக்கரு தமிழ் பண்பாட்டிற்குரிதாக உள்ளது என்றும், பெண்களை இழிவு செய்யா படம் என்றும் தெரிவித்துள்ளார்கள். எனினும், **"8 தோட்டாக்கள்"** திரைப்படத்தின் தலைப்பு தமிழில் இல்லை என்பதால் வரிவிலக்கிற்கு இத்திரைப்படம் தகுதியானதல்ல என குறிப்பிட்டுள்ளார்கள். இந்நேர்வில், தமிழ் வளர்ச்சி இயக்குநர், **"8 தோட்டாக்கள்"** என்பதில்,

தோட்டா என்பது உருது சொல்லாகும் என்றும், இதற்கு தமிழ் மொழியில் துப்பாக்கி குண்டு என்பதாகும் என்றும், எனினும், தமிழ் நாடு காவல் துறையில் தோட்டா என்ற சொல் வழக்கில் இருந்து வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரையை கருத்தில் கொண்டும், தமிழ் நாடு காவல் துறையில் தோட்டா என்ற சொல் வழக்கில் இருந்து வருகிறது என்ற தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கருத்தின் அடிப்படையிலும், பொது (தேர்தல்–III) துறை வழங்கிய இசைவின் அடிப்படையிலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, தற்போது தேர்தல் நடைபெறவுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி தவிர்த்து தமிழகத்தின் பிற பகுதிகளில், **“8 தோட்டாக்கள்”** தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

6. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதியில் **“8 தோட்டாக்கள்”** தமிழ் திரைப்படத்தினை திரையிடுவதன் மூலம் வசூலிக்கப்படும் கேளிக்கை வரியினை அரசுக்கு செலுத்த வேண்டும் எனவும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

முனைவர் ச.சந்திரமௌலி,
கூடுதல் தலைமைச் செயலாளர் (முகூபொ)

<u>பெறுநர்</u>

✓கூடுதல் தலைமைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

நகல்:
சிறப்பு நிலை நேர்முக உதவியாளர்,
அமைச்சர் (வணிகவரி) அலுவலகம், சென்னை–9.
வணிகவரி மற்றும் பதிவு (அநமு) பிரிவு, சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை–9.
பொதுத் (தேர்தல்) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/4/2017
பிரிவு அலுவலர்.